தலைப்பு 001 – அதிமேதகு சனாதிபதி அலுவலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 001 அதிமேதகு சனாதிபதி அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 11(1) நிதிக்கூற்றுக்கள் பிரிவின் பிரகாரம் சனாதிபதி அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 ஜுன் 26 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் சனாதிபதி செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 06 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அதிமேதகு சனாதிபதி அலுவலகத்தின் 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களினால், நிதி நிலைமை, நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மைகள் தொடர்பில் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி அலுவலகத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அதிமேதகு சனாதிபதி அலுவலகத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி நிர்ணயத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்படடிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அலுவலகத்தினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 35,180,492,000 ஆன கட்டுநிதியை திட்டமிட்டு ரூபா 34,968,065,000 ஆன கட்டுநிதி கோரப்பட்டிருந்த போதும் உண்மையாகக் கிடைத்த கட்டுநிதி ரூபா 3,918,119,000 ஆனது. அதன் பிரகாரம் கிடைத்த கட்டுநிதி திட்டமிட்ட மற்றும் கோரிய கட்டுநிதியின் 11 சதவீதமாக இருந்தது. மேலும், அலுவலகத்தினால் நான்கு மாதங்களிற்கு திட்டமிட்ட கட்டுநிதியை விட அதிகமாக திறைசேரியிடம் கட்டுநிதி கோரப்பட்டிருந்தது.	அங்கீகார பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த கட்டுநீதி தேவைப்பாட்டை திட்டமிட்டு திறைசேரியிலிருந்து கட்டுநிதி கோரும் போது மாதாந்தம் செலவாகும் என அதிர்பார்க்கும் தேவைப்பாடு மாத்திரம் கோரப்படுகிறது. திறைசேரியினால் கட்டுநிதி விடுவிக்கப்படுவது கொடுப்பனவிற்காக எல்லா வகையிலும் சம்பூர்ண வவுசர் பத்திரங்களிற்கு மாத்திரம் ஆகையால் மாதாந்தம் கோரப்பட்ட மற்றும் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதி அளகுகளிற்கு இடையே வித்தியாசமொன்று காணப்படுகின்றது.	தேவைப்பாட்டை இனங்கண்டு நடைமுறை சாத்தியமாக கட்டுநிதியை திட்டமிட வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்கியதாக செலவின மதிப்பீட்டை தாயாரித்து போதிய மற்றும் மிகவும் சரியாக நிதிஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்ளாத காரணத்தால் செலவு விடயங்களிற்கு தேவையான அளவை விட அதிகமாக நிதிஏற்பாட்டை பெற்றுக் கொண்டு ஐந்து செலவு விடயங்களின் வருடாந்த நிதிஏற்பாடான ரூபா 1,353,000,000 இனை செலவிடாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.	புதிய கொள்வனவுகளை மட்டுப்படுத்திமை, மதிப்பீட்டு நிதிஏற்பாட்டு எல்லையினுள் செலவுகள் சமர்ப்பிக்கப்படாமை, எதிர்பார்த்தவாறு நிகழ்சித் திட்டங்கள் செயற்படாமை, அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளவதற்கு நிதிஏற்பாட்டை பெற்றுக் கொண்ட போதும், அதற்கான கருத்திட்ட உத்தேசங்கள் சமர்ப்பிக்கப்படாமை ஆகிய காரணங்களால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.	தேவைக்கு இணங்க நடைமுறை சாத்தியமான மதிப்பீடு தயாரிக்க வேண்டும்
(ஆ)	11 செலவு விடயங்களில் நிதிப் பிரமாணம் 66 மூலம் செலவு விடயங்களிற்கு நிதிஏற்பாட்டை மாற்றிய பின்னரும், தேறிய நிதிஏற்பாட்டில் 20 முதல் 73 சதவீதம் வரையான வீச்சளவில் சேமிப்பு காணப்பட்டது**.**	உத்தியோக பூர்வ வெளிநாட்டு பிரயாணங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை, அத்தியவசிய கட்டிட சிறு திருத்தம் மற்றும் பாராமரிப்பு செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்மை, எதிர்பார்த்த செலவுகள் சமர்ப்பிக்கப்படாமை, எரிபொருள் விலை, வாகன பயன்பாடு, உபசரிப்பு மற்றும் ஏனைய செலவுகள் குறைந்தமை, நிறுவனத்தின் உள்ளக வளங்களை பயன்படுத்தி மென் பொருட்களை மேம்படுத்தியமை, தொலை தொடர்பு நடவடிக்கைகளை இலத்திரனியல் தொழிநுட்பத்தின் ஊடாக செய்தமை, ஒத்துழைப்பு மீதான அரசின் பங்களிப்பு சதவீதம் குறைந்தமை, நிலவிய சீரற்ற காலநிலை, அலுவலர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபட்டமை, புதிய அரசு நியமிக்கப்பட பின்னர் ஆரம்பிக்கப்படாத அபிவிருத்தி கருத்திட்டங்களை நிருத்தியமை போன்ற காரணங்களால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது,	மேற்படி
(இ)	23 செலவு விடயங்களின் நிதிஏற்பாடான ரூபா 5,562,000,000 இன் 30 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சளவில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது	சனாதிபதி அலுவலகத்தின் தற்பாலிக பதவியணியினரின் நியமனம் முடிவுறுத்தப்பட்டமை, பிரயாண செலவு வவுசர்கள் சமர்ப்பிக்கப்படாமை, நிகழ்சித் திட்டங்கள் நடாத்தப்படாமை, சிக்கனமான வளப் பயன்பாடு, வாடகை கொள்வனவு உடன்படிக்கைகள் முடிவடைந்தமை, மிகவும் அத்தியவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் மாத்திரம் வினைத்திறனாக மேற்கொண்டமை,	மேற்படி

		அலுவலக வளவிற்கு வெளியில் காணப்பட்ட பிரிவுகள் மூடப்பட்டமை அல்லது பிரதான அலுவலக வளவில் இஸ்தாபிக்கப்பட்டமை, புதிய கொள்வனவுகளை மட்டுப்படுத்திமை, நிறுவனத்தின் உள்ளக வளங்களை பயன்படுத்தி மென் பொருட்களை மேம்படுத்தியமை, சீரற்ற காலநிலை, அலுவலர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபட்டமை, ஆரம்பிக்கப்படாத அபிவிருத்தி கருத்திட்டங்களை நிருத்திமை, இளைஞர் முன்னேற்றத்திற்கான கருத்திட்ட உத்தேசங்கள் சமர்ப்பிக்கப்படாமை வவுசர்களில் குறைபாடுகள் காரணமாக கொடுப்பனவு செய்யப்படாமை போன்ற காரணங்களினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	16 செலவு விடயங்களிற்காக வருடாந்த மதிப்பீட்டு நிதிஏற்பாடுகளிற்கு மேலதிகமாக நி.பி.66 மூலம் ரூபா 1,601,625,118 ஆன நிதிஏற்பாட்டை பெற்றுக் கொண்டு 25 சதவீதம் முதல் 400 சதவீதம் வரை நிதிஏற்பாடு அதிகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது.	வாகன திருத்தற் கிரயம் அதிகரித்தமை, பிரயாணப் படிகளை பெறும் அலுவலர்கள் அதிகரித்தமை, சனாதிபதி பாதுகாப்பு அலுவலர்களின் செலவு அதிகரித்தமை, மூலதன தன்மைலான திருத்த உதிரிபாகங்களின் விலை அதிகரித்தமை, ஏனைய வழங்கல செலவுகள் சமர்ப்பிக்கப்பட்டமை மற்றும் விலை அதிகரித்தமை, நீதிமன்ற தீர்ப்பின் மீது நிலுவை வீட்டு குத்தகை வாடகை செலுத்தியமை, பல பிரதேசங்களில் நிகழ்சித் திட்டங்களிற்காக நானாவித சேவைகளிற்காக நிதிஏற்பாடு போதாதமை, புதிய அலுவலக வளவிற்கு பாதுகாப்பு சேவை வழங்கியமை, தமிழ் மொழி பயிற்சி நிகழ்சித் திட்டங்களை செயற்படுத்தியமை, புதிய அலுவலக உபகரண கொள்வனவு, 2023 இற்கான மானியங்கள் 2024 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டமை, உலக உணவு நிகழ்சித் திட்டத்தின் கீழ் உணவு மற்றும் ஏனைய கருத்திட்டங்களிற்காக நிதிஏற்பாடு கிடைத்தமைகளிற்காக மேலதிக நிதிஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டது.	மேற்படி
(உ)	செலவு விடய இலக்கம் 001-2-6-3-2509 அபிவிருத்தி மூலாரம்ப ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக்ககாக வருடாந்த மதிப்பீட்டு நிதிஏற்பாடு ரூபா500,000,000 ஆனதுடன் குறைநிரப்பு	வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு நிதிஏற்பாட்டு அளவை விட கிராமிய அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக நிதிஏற்பாட்டு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செலவு விடய இலக்கம் 001-2-06-003-	தேவைக்கு இணங்க நடைமுறை சாத்தியமான மதிப்பீடு தயாரிக்க வேண்டும்

	மதிப்பீட்டின் மூலம் ரூபா1,000,000,000 மற்றும் பாராளுமன்ற் மேலதிக நிதிஏற்பாட்டின் மூலம் ரூபா8,750,000,000 ஆக கூட்டுத் தொகை ரூபா9,750,000,000 ஆன மேலதிக நிதிஏற்பாடு பெறப்பட்டிருந்தது. மேலதிகமாக பெற்றுக் கொண்ட நிதிஏற்பாட்டு அளவு மதிப்பீட்டு நிதிஏற்பாட்டின் 1,950 சதவீதமாக இருந்தது.	2509 இற்காக ரூபா 1,000 மில்லியன் மற்றும் செலவு விடய இலக்கம் 001-2-006-023-2509 இற்காக ரூபா21,000 மில்லியன் மேலதிக நிதிஏற்பாடு மற்றும் சனாதிபதி செலவினத் தலைப்பின் கீழ் நிகழ்சித் திட்ட இலக்கம் 024, 025, 026, 027, 028, மற்றும 032 இற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிஏற்பாட்டில் சேமிப்பு ரூபா8,750 மில்லியன் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செலவு விடய இலக்கம் 001-2-06-003-2509 இற்காக மாற்றப்பட்டது.	
(ஊ)	வருடாந்த மதிப்பீட்டு நிதிஏற்பாடுகளிற்கு மேலதிகமாக நி.பி.66, குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் பாராளுமன்ற மேலதிக மதிப்பீடு மூலம் ரூபா 8,767,500,000 ஆன மேலதிக ஏற்பாட்டை பெற்றுக் கொண்ட 03 செலவு விடயங்களில் 44 சதவீதத்திற்கும் 49 இற்குமிடையிலான செலவுகள் செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.	புதிய ஆணைக்குழு அலுவலகத்திற்காக உபகரணங்களை கொள்வனவு செய்ய மேலதிக ஏற்பாடு பெற்றுக் கொண்ட போதும், மூடப்பட்ட பிரிவுகளின் பண்டங்கள் தேவைப்பாடுள்ள பிரிவுகளிற்கு விநியோகித்தல் மற்றும் பாதீட்டு சுற்றறிக்கை 01/2024 பிரகாரம் கொள்வனவு மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது.. 2024 ஆண்டில் தேர்தல் நடாத்தப்பட்ட காரணத்தால் அரச அலுவலர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டமை மற்றும் தேர்த்தல் சட்ட திட்டங்கள் செயற்பட்டமை மற்றும் 2024 ஆண்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக திட்டமிட்டவாறு குறித்த நிறுவனங்களிற்கு கருத்திட்டங்களை செயற்படுத்த தடை ஏற்பட்டிருந்தது. புதிய நிர்வாகம் எவ்வித கருத்திட்டத்தையும் பிற்போடக் கூடாது என தீர்மானித்ததால் நிறுவனத்தினால் 2024 ஆண்டினுள் நிறைவு செய்ய முடியுமான கருத்திட்டங்களை மாத்திரம் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.	மேற்படி

3.3 சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமைகள்

அவதானிப்புக்கள்		பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு	**இணக்கமின்மை**		
1986 இன் 04 இலக்க சனாதிபதிகளின் உரிமை சட்டத்தின் 3(2) பிரிவு	முன்னால நான்கு சனாதிபதிமார்களுக்கு வழங்க முடியுமான உச்ச உத்தியோகபூர்வ வகனங்கள் எண்ணிக்கையை விட ஒருவருக்கு 03 முதல் 14 வரை 38 வாகனங்கயை 2025 சனவரி மாதம் வரை கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.	ஒரு வாகனத்தை எட்டாம் நிறைவேற்று சனாதிபதி அவர்களின் நிறைவேற்ற கட்டளையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. சனாதிபதி செயலகத்தால் ஓய்வு பெற்ற 04 சனாதிபதிமார்கள் மற்றும் விதவை சனாதிபதி பாரியார்களிற்கு 52 வாகனங்கள் இணைக்கப்பட்டு இருந்துள்ளது. எனினும் சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை இலக்கம் பீஎஸ்/சீஎஸ்ஏ/00/1/4/12 மற்றும் 2025.01.21 திகதிய சுற்றறிக்கை பிரகாரம் தற்போது உச்ச வாகனங்கள் 02 ஆகுமாறு அவர்களிற்கு உரித்தாகும் வாகன அளவை மாத்திரம் ஓய்வு பெற்ற சனாதிபதிமார்கள் மற்றும் விதவை சனாதிபதி பாரயார்களிற்கு இணைக்கப்பட்டுள்ளது..	சட்டத்தின் அறிவுரைகளிற்கு இணங்குமாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 கடமை பணிகளை மேற்கொள்ளாமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அபிவிருத்தி மூலாரம்ப ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை (001-2-06-003-2509) இன் கீழ் 11,234 கருத்தட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுட்ன 2024 திசெம்பர் 31 அன்று அவற்றில் 3,544 கருத்திட்டங்கள் அதாவது அங்கீகரித்த கருத்திட்டஙளின் 32 சதவீதம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஏழு மாவட்டங்களில் அங்கீகார கருத்திட்டங்களில் 50 சதவீதத்திலும் அதிக கருத்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.	சனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் காரணமாக அரச அலுவலர்கள் தேர்த்தல் கடமைகளில் ஈடுபட்டமை, தேர்தல் சட்ட திட்டங்ள் பிரகாரம் நடவடிககை எடுத்தமை மற்றும அதிக மழை போன்ற சீரற்ற காலநிலை போன்ற காரணங்களால் திட்டமிட்டவாறு கருத்திட்டங்கள் செயற்படாமை கருத்திட்டங்களை செயற்படுத்திய பின்னர் எஞ்சிய நிதிஏற்பாடு சனாதிபதி அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சனாதிபதி செயலாளரின் 2024.11.11 திகதிய கடிதம் பிரகாம் 2024 ஆண்டின் அனைத்து கருத்திட்டங்களினதும் பௌதீக முன்னேற்றத்தை 2024.11.30	திட்டமிட்டவாறு அபிவிருத்தி கருத்திட்டங்களை நிறைவு செய்ய வேண்டும.

		திகதிக்கு முன்னர் முடியுறுத்த வேண்டியமை, 2024.12.15 திகதிக்கு முன்னர அனைத்து பட்டியல்களினது கொடுப்பனவுகளை நிறைவு செய்ய வேண்டியமை காரணமாக செயற்படுத்த போதிய காலம் இல்லாத கருத்திட்டங்களை செயற்படுத்தும் நிறுவனங்களால் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எந்தவொரு கருத்திட்டத்தையும் பிற்போடக் கூடாதென சனாதிபதி அலுவலக புதிய நிர்வாகத்தினால் தீர்மானித்த காரணத்தால் 2024 ஆண்டினுள் நிறைவு செய்ய முடியுமான கருத்திட்டங்களை மாத்திரம் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	2024 திசெம்பர் 31 திகதி முன்னேற்ற அறிக்கை பிரகாரம் அபிவிருத்தி மேம்பாட்டு ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக்காக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அங்கீகார நிதிஏற்பாடு ரூபா 24,572,787 ஆன 04 கருத்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்தன.	மேற்படி	மேற்படி
(இ)	பெறுந்தோட்ட மக்களிற்கு காணி உரிமையை வழங்குதல் (செலவு விடயம் 001-2-06-022-2509) இற்கான 2024 திசெம்பர் 31 திகதி வரை முன்னேற்ற பொழிப்பின் பிரகாரம் ஆறு மாவட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட எண்ணிக்கையில் 61 இற்கும் 86 இற்கும் சதவீதத்திற்கு இடையிலான வீச்சளவில் 748 கருத்திட்டடங்களில் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி
(ஈ)	இளைஞர் மேம்பாட்டு நிகழ்சித் திட்டத்தின் (செலவு விடயம் 001-2-06-29-2504) கீழ் அநுராதபுர மற்றும் இரத்மலான மாவட்டங்களிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த கருத்திட்டங்களை	மேற்படி	மேற்படி

	மீளாய்வாண்டு இறுதி வரை நிறைவு செய்திருக்கவில்லை. அதற்காக முறையே ரூபா 25.4 மில்லியன் மற்றும் 2.45 மில்லியன் நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அம்பாறை மாவட்டத்தில் அங்கீகார 248 கருத்திட்டங்களில் 156 கருத்திட்டங்கள் அதாவது அங்கீகார கருத்திட்ட எண்ணிக்கையின் 63 சதவீதத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(உ)	இளைஞர் மேம்பாட்டு நிகழ்சித் திட்டத்திற்காக நுவரெலிய மாவட்டத்திற்கு அங்கீகார கருத்திட்டங்கள் இருக்காத போதும் அந்த மாவட்டத்திற்காகவும் ரூபா 29 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கி ரூபா 0.335 மில்லியன் நுவரெலிய மாவட்டத்தில் விளையாட்டு கழகங்களிற்காக விளைபாட்டு பொருட்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை பெற்றுக் கொள்ள பத்திரிகை அறிவித்தல் பிரசுறிக்க செலவிடப்பட்டிருந்தது. இளைஞர் மேம்பாட்டிற்காக எத்தொகையும் செலவிடப்பட்டு இருக்கவில்லை.	இளைஞர் மேம்பாட்டு நிகழ்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்த உத்தேசித்த பெறுந்தோட்டங்களில் பதிவு செய்த விளைபாட்டு கழகங்களிற்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கும் கருத்திட்டம் தேசிய கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களை செயற்படுத்த நுவரெலிய மாவட்டத்திற்கு ரூபா 29,142,145.00 நிதிஏற்பாட்டை சனாதிபதி அலுவலகம் வழங்கியது. வழங்கிய நிதிஏற்பாட்டை பயன்படுத்தி தேவையான உபரணங்களை கொள்வனவு செய்ய பெறுகைகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பத்திரிகை அறவித்தல் வெளியிடப்பட்டது. 2024 ஆண்டில் நடந்த இரண்டு தேர்தல்கள் காரணமா அதற்கான முன்நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போனதால் நுவரெலிய மாவட்ட செயலகத்தினால் நேரடியாக அறிவிக்கப்பட்டுள்ளது.	அவ்வாறே
(ஊ)	04 மாவட்ட செயலகங்களிற்கு வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 58,354,990 நிதிஏற்பாட்டில் இருந்து எவ்வித இளைஞர் மேம்பாட்டு நிகழ்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்படாது முழுமையான நிதிஏற்பாட்டு தொகையும் எஞ்சியிருந்தது.	இந்த மாவட்ட செயலகங்களிற்கு நிதிஏற்பாடு ஒதுக்கிய போதும், தேர்தல், சீரற்ற காலநிலை மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களை பிற்போடாது ஆண்டினுள்ளே நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதால் அபிவிருத்தி கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி

4.2 பிரதான பணிகளிற்கு எதிரான செயற்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சனாதிபதி அலுவலக செலவின மதிப்பீட்டினுள் சனாதிபதி நிதியத்தின் பணிகளிற்காக வெலவு விடயம் இல்லாத போதும், மீளாய்வாண்டில் நிதியத்தின் நிரந்தர மற்றும் தற்காலிக ஆளணியினரிற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 47,373,717 தொகை, நிர்வாக செலவாக ரூபா 16,490 தொகை, பராமரிப்பு செலவு 963,808 தொகை மற்றும் ஏனைய செலவுகளாக ரூபா 2,774,063 தொகைகளாக கூட்டுத் தொகை ரூபா 51,128,078 அலுவலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.	சனாதிபதி நிதயத்தினால் செலவிடுவதன் மூலம் மக்களிற்கு நிவாரணம் வழங்க இருக்கின்ற நிதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், பொது மக்களிற்கு உச்ச நலன்புரி வசதிகளை வழங்கும் நோக்கில் சனாதிபதி அவர்களின் நிதியத்திற்குரிய நிர்வாக செலவுகள் சனாதிபதி அலுவலகத்தினால் செய்யப்பட்டுள்ளது.	செலவின அலகுகளை சரியாக இனங்கண்டு செலவிட வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சனாதிபதி அலுவலக பெயரில் பதிவு செய்துள்ள போதும் பௌதீக இருப்பை உறுதி செய்ய முடியாத 29 வாகனங்கள் 2025 ஜுன் 09 திகதி வரை நிலவின. இந்த வாகனங்கள் காணாமல் போனதாக அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு / நபரொருவரிற்கு ஒப்படைத்ததாக ஏனும் எவ்வித எழுத்துமூல சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	குறித்த 29 வாகனங்களினதும் பௌதீக இருப்பை உறுதி செய்து கொள்ளவதற்காக அது தொடர்பாக குற்றப் புலனாய்வ திணைக்களத்தின் மூலம் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த விசாரணை நடவடிக்கைகள் இதுவரை முடிவடையவில்லை.	சொத்துக்களின் பௌதீக இருப்பை உறுதி செய்ய நடடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டினுள் சனாதிபதி அலுவலக வாகனங்களை திருத்துவதற்காக செலவிடப்பட்ட மொத்த செலவு ரூபா 645,336,774 ஆனதுடன் அந்த ஆண்டினுள் ஒரே வாகனத்தின் திருத்தற் தடவைகள 10 முதல் 17 வரையான வீச்சளவில் திருத்திய 53 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், கணக்காய்விற்கு கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம், ரூபா மில்லியன் 1 - 40 இற்கிடையிலான மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 189 வாகனங்களிற்காக 2024 ஆண்டினுள்	சனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான அதிக வாகனங்கள் 2016 இற்கு முன்னர் உற்பத்தி செய்த வாகனங்கள் ஆவதுடன், அந்த வாகனங்கள் இதுவரை 10 ஆண்டுகள் அல்லது அதைவிட பழமையானவை மற்றும் நீண்ட காலமாக பயன்படுத்தியுள்ள வாகனங்கள் ஆவதுடன் அந்த வாகனங்களை கடமை தேவைப்பாட்டின் மீது தொடர்ந்து கடமையில் ஈடுபடுத்த தேவையாகும்.	சிறந்த வாகனத் தொகுதி ஒன்றை போணிக் கொள்ளல் மற்றும் அதன் பராமரிப்பு கிரயத்தை குறைத்துக் கொள்ள வேண்டியமை.

ஒரு வாகனத்திற்கு ரூபா மில்லியன் 01-28 வரையான வீச்சளவில் திருத்தங்களிற்காக செலவிடப்பட்டிருந்தது.	அந்த வாகனங்களை பயன்படுத்தும் அலுவலர்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனத்திற்கொண்டு அதன் தவறுகளை விரைவில் திருத்த நடவடிக்கை எடுப்பது அத்தியவசியம் ஆகையால் அனைத்து பராமரிப்பு நடவடிக்கைகளும் இயந்திவியல் பொறியியலாளர் மற்றும் தொழிநுட்ப பரிந்துரையின் மீது பெறுகைகள் வழிகாட்டியை பின்பற்றி மேற்கொள்ளப்படுகின்றன. வாகனங்களின் ஆயுட்காலம் கடந்து செல்கின்றமை, அதிக கடமைப்பாட்டின் மீதும் தொடர்சியாக பயன்படுத்துகின்ற காரணத்தால் பராமரிப்பு செலவு அதிகரித்துள்ளது.	

4.4 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
புத்தசாசண, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சிற்கு சுவீகரித்திருந்த 27 வாகனங்கள் தொடர்ந்தும் சனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான வாகனங்களாக குறிப்பிடப்பட்டிருந்தது.	சனாதிபதி அலுவலக வாகன பட்டியலிலிருந்து அகற்ற மற்றும் விகாரைகளிற்கு ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகள் புத்தசாசண அமைச்சின் தலையீட்டில் மேற்கொள்ளப்படும். அனைத்து கடித ஆவணங்களும அந்த வாகனங்கள் விகாரைகளிற்கு ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் புத்தசாசண அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்யவதற்காக 2025.03.14 திகதி புத்தசாசண அமைச்சின் அலுவலர்களுடன் கலந்துரையாடி அந்த ஒப்படைப்பு நடவடிக்கைகளை விரைவில் முடிவுறுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.	சொத்துக்களின் உரிமை மற்றும் இருப்பு தொடர்பான தகவல்களை நாளாதுவரையாக பேணிக் கொள்ள வேண்டும்.

4.5 நிதி மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விசேட கருத்திட்ட பிரிவின் கடமைப் பணிகளிற்காக அலுவலகத்தினால் பென்ஸ் வண்டி ஒன்றை வழங்கியிருந்ததுடன் போக்கு வரத்து பிரிவின் அறிகை பிரகாரம், இந்த வாகனம் ஒரு லீற்றர் எரிபொருளினால் 6 km செலுத்த முடியும். 2022 நவம்பர் முதல் 2024 செப்டம்பர் வரை இந்த வண்டி 30,689 km செலுத்தப்பட்டு இருந்ததுடன், அதன் பிரகாரம் அதற்காக அன்னளவாக எரிபொருள் லீற்றர் 5,150 அளவு தேவைப்பட்ட போதும், அலுவலகத்தின் எரிபொருள் கூப்பன்களை பயன்படுத்தி இந்த வண்டிக்கு எரிபொருள் 7,425 லீற்றர்கள் அதாவது பொதுவான தேவைப்பாட்டை விட 2,300 லீற்றர்கள் கூடதலாக பெற்ப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் அரச சொத்துக்களை தவறாக துஸ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றதா என நிச்சயித்துக் கொள்ளவதற்காக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க மற்றும் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்படும்.	எரிபொருள் பயன்பாடு தொடர்பாக காணப்படும் கட்டுப்பாட்டு முறைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2013 ஆண்டில் அலுவலகத்தினால் முன்னால் சனாதிபதி ஒருவரின் பயன்பாட்டிற்காக வெளிநாட்டு வழங்குனர் ஒருவரிடம் Mercedes Benz G63 AMG வகையான வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த கொள்வனவுக்காக பெறுகைகள் வழிகாட்டி பின்பற்றப்பட்டமை உறுதியாகாததுடன் அலுவலகத்தினால் இதற்காக பிரித்தானிய வழங்குனரிற்கு 2013 நவம்பர் 14 நாணயப் பத்திரத்தின் மூலம் ரூபா	சனாதிபதி ஆளணியினரின் பிரதானியின் அறிவித்தலின் பிரகாரம் இந்த Mercedes Benz G63 AMG வண்டியை கொள்வனவு செய்வது தொடர்பாக விலைமனு பத்திரம் இங்கிலாந்தின் லண்டனில் அமைந்துள்ள கம்பனியொன்றின் உள்நாட்டு முகவர் நிறுவனமொன்றிடம் பெற்று அவை மற்றும் அதற்குரிய ஏனைய தகவல்களையும் உள்ளடக்கி இந்த வண்டியை கொள்வனவு செய்ய 2013.10.08 திகதி சனாதிபதி செயலாளரிற்கு அனுப்பி அங்கீகாரம் கிடைத்துள்ளது. உள்நாட்டு முகவர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த	சொத்துக்களை கொள்வனவு செய்வதனை நிலவுகின்ற சட்ட விதிகளிற்கு இணங்கம் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும்.

16,489,711 தொகை அனுப்பப்பட்டிருந்தது.

இதற்கு மேலதிகமாக 2014 மார்ச் 07 மற்றும் மே 09 திகதிகளில் தனியார் தரப்பினரிற்று மீண்டும் ரூபா 16,250,000 செலுத்தப்பட்டு இருந்ததுடன் குறித்த தனியார் தரப்பினரால் அத் தொகை வெளிநாட்டு வழங்குனரிற்கு கட்டணமாக செலுத்தியதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் அவ்வாறு செலுத்தியதாக உறுதியாகாததுடன், நாணயப் பத்திரம் அலுவலகத்தினால் திறந்திருக்கும் போது அரச நிதி மூன்றாம் தரப்பினரிற்கு செலுத்தியதற்கான அடிப்படை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை.

அந்த தனிப்பட்ட தரப்பினரால் இந்த மோடார் வண்டியை இறக்குமதி செய்து அலுவலகத்திற்கு வழங்கியமை உறுதி செய்யப்படாததுடன் சுங்கத்தின் குறிபின் பிரகாரம் 2013 நவம்பர் 21 திகதி இலங்கைக்கு கிடைத்திருந்த வண்டி 2019 திசெம்பர் 10, அதாவது ஆறு ஆண்டுகளின் பின்னர், மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. சுங்க குறிப்பிடலின் பிரகாரம் இந்த வண்டிக்கு இறக்குமதி சுங்க வரியாக செலுத்த வேண்டிய ரூபா 45,982,438 செலுத்தப்படாமல் விடுவிப்பதற்குரிய அதிகாரிகளின் அங்கீகாகரம் கணக்காய்விற்கு உறுதியாகாததுடன் கொடுப்பனவுகள் பற்றிய வண்டியின் பெறுமதி ரூபா 32,000,000 ஆவதுடன் நிறுவுனத்தினால் 2013.10.01 திகதி மோடார் வண்டியை கொள்வனவு செய்ய கொள்வனவு விலையின் 50% அதாவது ரூபா 16,250,000 தொகையை காசு முற்பணமாக செலுத்துமாறு அறவித்ததற்கு உரியதாக ரூபா 16,43,975 செலுத்தப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் 76,500 ஸ்டரிங் பவுன்களை மேற்குறித்த வண்டியை கொள்வனவு செய்ய முற்பணம் செலுத்தியுள்ளதாகவும், 2013.11.14 திகதி 77,000 ஸ்டலிங் பவுன் மேற்குறித்த மோடார் வண்டியை கொள்வனவு செய்ய நாணயப் பத்திரம் மூலம் இங்கிலாந்தில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்ய விநியோகித்துள்ளதாக சனாதிபதி அலுவலகத்தில் காணப்படும் தகவல்களின் பிரகாரம் வெளிப்படுகின்றது.

இந்த வண்டிக்காக வரி செலுத்துதல் அல்லது விடுவிப்பதற்காக பெற்றுக் கொண்ட அங்கீகாரமொன்று அல்லது வேறு தகவல்கள் சனாதிபதி அலுவலகத்தில் காணப்படவில்லை.

அவ்வாறே 2015.07.24 திகதி முதல் 2025.03.17 திகதி வரை வண்டியின் திருத்தம், பருவகால சேவை மற்றும் பெட்டரி பொருத்துவதற்காக ரூபா 14,506,876 கிரயம் செய்யப்பட்டுள்ளதுடன் அந்த அனைத்து செலவுகளும் இயந்திவியல் பொறியியலாளர் மற்றும் தொழிநுட்ப பரிந்துரையின் மீது பெறுகைகள் வழிகாட்டியை பின்பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொடுப்பனவு வவுசர் பத்திரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

2015.07.24 திகதி முதல் 2025.03.17 திகதி வரை 10 ஆண்டுகள் காலத்தினுள் இந்த வண்டி கிலோ மீற்றர் 49,950 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன், கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம், திருத்தம், பராமரிப்பு மற்றும் பருவகால சேவை செலவுகளாக அக்காலத்தினுள் கூட்டுத் தொகை ரூபா 14,506,876 செலவிடப்பட்டிருந்தது.